**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி**
**முன்னிலை: திருமதி.B.வித்யா,L.L.M.,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.**
**வழக்கு எண்.C.C. 88/2021**

2025 ஆம் ஆண்டு மே மாதம் 08ம் தேதி வியாழன் கிழமை குற்றம் முறையிடுபவரின் சார்பாக வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா.3**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : உண்ணாமலை | தொழில் | : | விவசாயம் |
| கணவர் பெயர் | : மாயவன் | | | |
| கிராமம் | : ஆத்திப்பட்டு | வயது | : | 47 |

சாட்சியையும், எதிரிகளையும் அவலூர்பேட்டை காவல் நிலையத்தின் நீதிமன்ற காவலர் திரு. ஆரோக்கியதாஸ் Gr.1 – 2692 என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது.

**( 1 முதல் 12, 14, 15 எதிரிகள் ஆஜர். 13ம் எதிரி இறந்துவிட்டார்.)**

**முதல் விசாரணை**

**1.** நான் ஆத்திப்பட்டு கிராமத்தில் வசித்து வருகிறேன். அ.சா.1 விஜயகுமார் என்னுடைய மகன். அ.சா.2 விஜயலட்சுமி என்னுடைய மகள். ஆஜர் எதிரிகள் அனைவரும் எங்கள் ஊரை சார்ந்தவர்கள். எனவே அவர்களை தெரியும்.

2. என் கணவருடன் பிறந்தவர்கள் 5 நபர்கள் ஆவர். கடந்த 2015ம் வருடம் எங்கள் மெத்தை வீட்டிற்கு படி கட்டினோம். அதன் பின்னிட்டு மேற்படி வருடத்தில், நானும், என் கணவரும் எனது அம்மா வீட்டிற்கு செல்வதற்காக ஆத்திப்பட்டு பேருந்து நிறுத்தத்திற்கு காலை சுமார் 7 மணி அளவில் சென்றிருந்தோம். அப்போது அண்ணாதுரை, கமல், தங்கம், சேட்டு, சுப்பிரமணி, சுந்தரமூர்த்தி, மூர்த்தி, பழனி, சண்முகம் மற்றும் 10 நபர்கள் எங்கள் வீட்டின் இடம் வந்து நாங்கள் கட்டி வைத்திருந்த படியை இடித்து கொண்டிருந்தார்கள். அப்போது அவர்களை பார்த்து அ.சா.1 எங்கள் வீட்டில் இருந்து வெளியே வந்து ஏன் இவ்வாறு படியை இடிக்கிறீர்கள் என்று கேட்டார். அவரை எதிரிகள் தங்கம் மற்றும் அண்ணாதுரை ஆகியோர் தடியை வைத்து அவரை அடித்துவிட்டனர். மேலும், அ.சா.1ஐ மேற்குறிப்பிட்ட இருவரும் வயிற்றின் மீது எட்டி உதைத்து காயத்தை ஏற்படுத்தினர். இதனை கேட்ட அ.சா.2 ஐ எதிரிகள் கமல் மற்றும் தங்கம் ஆகியோர்கள் எட்டி உதைத்து அவரது ஆடைகளை பிடித்து இழுத்து கிழித்தனர். எனது மூத்தார் மகன் மாசிலாமணி என்பவர் காயமடைந்த அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்களை செஞ்சி அரசு மருத்துவமனைக்கு அழைத்து

சென்றார். அ.சா.2 ஐ மேல்சிகிச்சைக்காக முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு பரிந்துரை செய்தனர். மேற்படி சங்கதி குறித்து எதிரிகளிடம் நானும், எனது கணவரும் கேட்டபோது எதிரி அண்ணாதுரை என்பவர் அவ்வாறு தான் படியை இடிப்போம் என கூறி என்னை ஆபாசமாக பேசினார். இவ்வழக்கு தொடர்பாக காவலர்கள் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை:**

3. நானும் என் கணவரும் இடுகாட்டிற்கு செல்லும் சாலையை ஆக்கிரமிப்பு செய்து மேற்குறிப்பிட்ட படியை கட்டினோம் என்றால் இல்லை. படி கட்டியிருந்த இடம் எங்களுக்கு சொந்தமான இடம்இல்லை என்று வருவாய் அலுவலர்கள் படி கட்டுவதற்கு முன்பே அளவீடு செய்து எங்களிடம் கூறினர் என்றால் இல்லை. படி கட்டுவதற்கு முன்பு வருவாய் துறை அலுவலர்கள் மேற்படி இடத்தின் இடம் ஆய்வு மேற்கொள்ள வரவில்லை. மேற்படி இடம் தொடர்பாக உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்துள்ளேன் என்றால் சரிதான்.

4. சம்பவம் நடந்த போது நான் ஆத்திப்பட்டு கூட்ரோட்டில் உள்ள பேருந்து நிறுத்தத்திடம் இருந்தேன் என்றால் சரிதான். பேருந்து நிறுத்தத்திற்கும் எங்கள் வீட்டிற்கும் இடையே சுமார் 1 பர்லாங்கு தூரம் இருக்கும் என்றால் அதைவிட குறைவான தூரம்தான் இருக்கும். 7 மணிக்கு கூட்ரோட்டிடம் இருந்தேன் என்றால் சரிதான். நான் எங்கள் வீட்டினிடம் வந்தபோது 7.30 மணி இருக்கும். நான் என் வீட்டினிடம் வந்து பார்த்தபோது வீட்டின் படி இடிக்கப்பட்டிருந்தது என்றால் சரிதான். அதனை யார் இடித்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. அதனை நான் பார்த்தேன். மிலிட்டரி மற்றும் மூர்த்தி ஆகியோர் அதனை இடித்தனர். மேற்படி இரு நபர்கள் படிகட்டை இடித்த விவரத்தை காவலர்களிடம் கூறினேன்.

5. அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்களை யார் யார் அடித்தனர் என்பதை நான் நேரில் பார்க்கவில்லை என்றாலும் அவர்கள் சொல்லித்தான் அவர்களை தாக்கிய நபர்களின் விவரங்கள் எனக்கு தெரியும் என்றாலும் சரிதான். நான் படி கட்டு இடித்ததை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் வீட்டில் இருந்திருந்தால் அதனை இடித்திருக்க மாட்டார்கள். நான் இடத்தை ஆக்கிரமிப்பு செய்ய வேண்டி அ.சா.1 ஐ வைத்து பொய் புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் படி கட்டு கட்டவில்லை என்றாலும் நான்

வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. இவ்வழக்கிற்கும் எதரிகளுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றாலும் சரியல்ல.

6. என் வீட்டினிடம் சம்பவத்தின்போது சுமார் 50 நபர்களுக்கு மேல் இருந்தனர். இவ்வழக்கு தொடர்பாக காவலர்கள் என்னை சம்பவம் நடந்து சுமார் 2 நாட்கள் கழித்து விசாரித்தனர். நான் சொல்வது போல் காவலர்கள் என்னை மேற்குறிப்பிட்ட நாளில் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை:** இல்லை

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.